# 11 தோத்திரப்பாடல் - திருப்புகழ்

சைவத் திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின்பு, பாடப்பட்ட பாடல்கள் தோத்திரப் பாடல்கள் எனப்படும். தோத்திரப் பாடல்களுள் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி முதலியன அடங்கும். திருப்புகழைப் பாடியவர் அருணகிரிநாதர் ஆவார். அவர் முருகப் பெருமானின் புகழைப் பலவகையிலும் புகழ்ந்து பாடிய பாடல்களின் தொகுப்பே திருப்புகழ் ஆகும். திருப்புகழ்ப் பாடல்கள் சந்தப் சிறப்பு, தாளச் சிறப்பு மிக்கவை. அருணகிரிநாதர் பாடிய பொதுத் திருப்புகழ்களில் ஒன்று இங்கே தரப்படுகின்றது.

**இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில் நீறும்**
**இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்**
**அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே**
**அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா**
**உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே**
**உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே**
**அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்**
**அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.**

### பொழிப்புரை :

பொருந்திய இடப வாகனமும், யானைத் தோல் போர்வையும், அழகிய திருநீற்றுப் பூச்சும், விளங்குகின்ற முப்புரிநூலும், புலித்தோல் ஆடையும், கையில் மழுவும் மானும், காதில் அசையும் தோடும், முடி மீது அழகிய தலைமாலையும் சூடியிருக்கின்ற சிவ-பெருமான் அன்புடன் வணங்கிக் கீழே இருக்க. அவருக்கு மேலே இருந்து பிரணவமந்திரத்தை உபதேசஞ் செய்த சிவகுருவே, சாத்திய வேலானது தோள்மீது பொருந்தியிருக்கின்ற முருகப் பெருமானே, பல வரங்களைப் பெற்று உயர்ந்த சூரனை, அவன் சுற்றத்துடன் அழியும்படி கோபித்தவரே, பாசக் கயிற்றை விருப்புடன் கையில் பிடித்த இயம தூதுவர் என்னை (மரண வேதனையில்) வருத்தாமல், அடியேன் அயர்வுற்றிருக்கும் பொழுது, அடியேனுடைய துன்பத்தை நீக்குவதற்கு, (நீ) பெரிய மயில் மீது ஏறி, என் முன்னே வந்தருளல் வேண்டும்.

### பத விளக்கம்

**ஏறு -** இடப வாகனம்; **கரி** - யானை; **எழில்** - அழகு, அழகிய; நூல் - முப்புரி நூல்; **சிரம்** - முடி; **அணிந்த** - சூடி இருக்கின்ற; ஈசன் - இறைவன், சிவபெருமான்; **பரிவு** - அன்பு; **உசந்த** - உயர்ந்த; **முனிவு** - கோபம்; **தூதுவர்** - இயம தூதுவர்; **கயிறு** - பாசக்கயிறு; **நலியாது** - வருத்தாது: **துயர்** - துன்பம்; **கெட** - நீக்க; **மா** - பெரிய; **புயம்** தோள்; **புலிய-தள்** - புலித்தோல்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தோத்திரப் பாடல்கள் என்றால் என்ன?
2. தோத்திரப் பாடல்களுள் அடங்கும் மூன்று நூல்களின் பெயர்களைத் தருக.
3. திருப்புகழின் ஆசிரியர் யார்?
4. திருப்புகழில் உள்ள சிறப்புகளைக் குறிப்பிடுக.
5. சிவகுரு என்று போற்றப்படுபவர் யார்?

## செயற்பாடு

1. பாடநூலில் தரப்பட்டுள்ள திருப்புகழை மனனம் செய்து பாடிக்காட்டுக.
2. இலங்கையில் கதிர்காமத் தலத்தின் மீது பாடப்பட்ட வேறு திருப்புகழ்ப் பாடல்களை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- தோத்திரப்பாடல்கள் என்பவை, சைவத் திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின் பாடப்பட்ட பாடல்களாகும்.
- தோத்திரப் பாடல்களுள் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி முதலானவை அடங்கும்.
- அருணகிரிநாதர் திருப்புகழைப் பாடினார்.
- திருப்புகழ்ப் பாடல்கள் சந்தச் சிறப்பு, தாளச் சிறப்பு மிக்கவை.